# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTENSION PROGRAMME

## First Semester Examination in Certificate in Business Administration (CBA) – 2004/2005/2006(June/July 2010)

## (Re-Repeat)

## CBA 1023 Financial Accounting

LIBRARY
03 AUG 2010
Eastern University, Sri Lanka

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: 3 மணித்தியாலங்கள்

---

01. திரு.நடேசன் என்னும் தனிவியாபாரியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2009 இல் தயாரிக்கப்பட் பரீட்சை மீதி பின்வருமாறு :

| விடயங்கள் | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|
| மூலதனம் | | 800000 |
| எடுப்பனவுகள் | 72000 | |
| 10% வங்கிக்கடன் | | 150000 |
| வங்கிக்கடன் வட்டி | 10000 | |
| வாடகை வரி, காப்புறுதி | 32500 | |
| மின்சாரம் | 37600 | |
| மின்சாரம் சென்மதி 01.01.2009 இல் | | 4000 |
| காகிதாதிகள் | 5400 | |
| விற்பனையாளர் சம்பளம் | 66000 | |
| அலுவலக சம்பளம் | 36000 | |
| விளம்பரம் | 75000 | |
| அறவிடமுடியாக் கடன் | 6000 | |
| பெற்ற கழிவு | | 10000 |
| கொடுத்த கழிவு | 13500 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 55500 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 31500 | |
| கொள்வனவுத் திரும்பல் | | 45000 |
| விற்பனைத் திரும்பல் | 60000 | |
| கொள்வனவுகள் | 950000 | |
| விற்பனைகள் | | 1665000 |
| காசும் வங்கியும் | 69000 | |
| 01.01.2009 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு | | 6000 |
| நிலையான சொத்துக்கள் (கிரயத்தில்) : காணி கட்டடம் | 600000 | |
| தளபாடம் பொருத்திகள் | 150000 | |
| மோட்டார் வாகனம் | 450000 | |
| 01.01.2009 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் | | 60000 |
| தளபாடம் பொருத்திகள் | | 30000 |
| மோட்டார் வாகனம் | | 150000 |
| கடன்கொடுத்தோர் | | 80000 |
| கடன்பட்டோர் | 90000 | |
| 01.01.2009 இல் இருப்பு | 190000 | |
| | 3000000 | 3000000 |

மேலதிகத் தகவல்கள்:

1. 31.12.2009 இல் இருப்புக்கள் – ரூபா. 180000
2. 31.12.2009 இல் சென்மதியாவுள்ள செலவுகள்: மின்சாரம் - ரூபா. 6000
   அலுவலக சம்பளம் - ரூபா. 10000

3. 31.12.2009 இல் முற்பணமாக உள்ளவை: விளம்பரம் - ரூபா. 25000
காப்புறுதி - ரூபா 7500

4. கடன்பட்டோரிலிருந்து ரூபா. 5,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்பட வேண்டும். மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

5. நிலையான சொத்துக்கள் மீதி பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

| | |
|---|---|
| கட்டடம்(கிரயம்- ரூ.300000) | - ஆண்டுக்கு 5% கிரயத்தில் |
| தளபாடம் பொருத்திகள் | - ஆண்டுக்கு 10% கிரயத்தில் |
| மோட்டார் வாகனம் | - ஆண்டுக்கு 15% குறைந்து செல் மீதியில் |

**வேண்டப்படுவது :**

திரு.நடேசன் என்னும் தனிவியாபாரியின் 31.12.2009 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலா நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக. (செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**(40 புள்ளிகள்)**

**2.** ஒரு தனிவியாபாரியாகிய திரு.தணிகாசலம் அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயினும் 31.12.2009 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழங்க கூடியவராகவுள்ளார்.

i. ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்

| கொடுக்கல் வாங்கல் | ரூபா. |
|---|---|
| காசு விற்பனைகள் | 180000 |
| காசுக் கொள்வனவுகள் | 140000 |
| கடன்பெற்றோரிடமிருந்து பெற்ற காசு | 800000 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது | 640000 |
| வாடகை செலுத்தியது | 40000 |
| சம்பளம் செலுத்தியது | 70000 |
| உபகரணம் வாங்கியது | 20000 |

ii. மீதிகள்

| மீதிகள் | 01.01.2008 | 31.12.2008 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காசு மீதி | 10000 | 20000 |
| இருப்புக்கள் | 90000 | 100000 |
| கடன்பட்டோர் | 70000 | 90000 |
| கடன்கொடுத்தோர் | 65000 | 55000 |
| வாடகை சென்மதி | 10000 | 15000 |
| தளபாடம் | 200000 | 190000 |
| உபகரணம் | 80000 | 95000 |

iii. ஆண்டுகாலத்தில் திரு. தணிகாசலம் வியாபாரத்தில் இருந்து அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக காசினை பற்றியிருந்தார். அப்பற்றுக்கள் பற்றி எதுவித பதிவுகளையும் அவர் பேணவில்லை.

iv. ஆண்டுகாலத்தில் நிலையான சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.01.2009 இல் உள்ளவாறான ஐந்தொகை
ii. 31.12.2009 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு
iii. 31.12.2009 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு
iv. 31.12.2009 இல் உள்ளவாறான ஐந்தொகை
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(40 புள்ளிகள்)**

3. சிறி என்னும் வியாபாரியின் 31.12.2009 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கு ஒன்றில் இடப்பட்டு பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) விற்பனை நாளேடு ரூ.10000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.
(ii) ஏ.சசி என்பவருக்கு விற்பனை ரூ.5000 கே.சசியின் கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது.
(iii) கொள்வனவு நாளேடு ரூ.5000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
(iv) பெற்றகழிவு ரூ.3000 கொடுத்தகழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.
(v) உபகரண விற்பனை ரூ.10000 விற்பனைக் கணக்கில் தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது.
(vi) செலுத்திய வட்டி ரூ.5400 அக்கணக்கில் பிழையாக ரூ.4500 என பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக
(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

**(10 புள்ளிகள்)**

4. கண்ணன் எனும் வியாபாரியின் காசேட்டின் வங்கி நிரல் 31.12.2009 இல் ரூ.4300 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் அதே மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியைக் காட்டியது. காசேட்டையும் வங்கிக் கூற்றையும் ஒப்பிடும் பொழுது பின்வரும் வேறுபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(i) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ.10000 அத் திகதி வரை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ15000 காசோலைகளில் ரூ.10000 மாத்திரமே 31.12.2009 வரை வங்கியால் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) வங்கியால் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ.2000 மற்றும் வாடகை ரூ.2500 காசேட்டில் பதியப்படவில்லை.

(iv) வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ.1500 காசேட்டில் இடம்பெறவில்லை.

(v) காசேட்டின் செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூ.500 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது

(vi) வங்கிக் கட்டணம் ரூ.600 காசேட்டில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது:

(i) காசேட்டை திருத்துக.

(ii) திருத்திய காசேட்டின் படியான வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 31.12.2009 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)